5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவினைப் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடு)

[@] 13–5–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, இன்று சட்டமன்றத்திலே நிறைவேற்றுதலுக்காகக் காத்துக்கொண்டிருக்கின்ற சிறுபான்மையினருக்கான மாநில ஆணையம் ஒன்றை அமைத்து உருவாக்குவதற்கும், அதன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கு வகை செய்வதற்குமான இந்தச் சட்டமுன்வடிவு சமூக நீதியினுடைய சரித்திரத்திலே ஒரு முக்கியமான மைல் கல். ஜனநாயகம் என்பது எங்களுடைய விளையாட்டு. பெரும்பான்மை ஆளவேண்டும், சிறுபான்மை வாழ வேண்டும். ஜனநாயகத்தினுடைய அளவு என்பது எவ்வளவு பேர் வாக்களிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது. ஆனால் ஜனநாயகத்தினுடைய தரம் என்பது,—அதிகாரம் எவ்வளவு தூரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது, மக்கள் தந்த அதிகாரத்திலே எந்தப் பிரிவினர்கள் எல்லாம் அதிகாரத்திலே பங்கேற்க இந்த அரசு அனுமதிக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் ஜனநாயகத்தினுடைய தரம் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. That is what we call the quality of democracy. ஆகவே, ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினர் எடுக்கின்ற முடிவாக இருந்தாலும்கூட, பெரும்பான்மையினர் நினைக்கின்றவற்றை, பெரும்பான்மையினர் விரும்புகின்றவற்றைச் செய்துகொள்வதற்குப் பாராளுமன்ற ஜனநாயகம் வழிவகுக்கிறது என்பது ஒரு வகையிலே உண்மையாக இருந்தாலுங்கூட, அந்த ஜனநாயகத்தில் சிறுபான்மையினருடைய உரிமைகள் எப்படிப் பாதுகாக்கப்படுகின்றன, சிறுபான்மையினருடைய நலன்கள் எப்படி சிறப்பான முறையிலே செயல்படுவதற்கு வழி வாய்க்கால்கள் அமைத்துத் தரப்படுகின்றன என்பதுதான் ஜனநாயகத்தினுடைய தரத்தினை—quality of democracy—நிர்ணயிக்கிற அளவுகோலாக இருக்கிறது. இந்த அவையிலே நான் என்னுடைய வணக்கமான நன்றிகளை, தமிழகத்திலே இருக்கின்ற சிறுபான்மை இஸ்லாமியர்கள், சிறுபான்மை கிறிஸ்தவர்கள், இன்னும் மொழியியல் சிறுபான்மையைச் சேர்ந்த மக்கள், இப்படி சிறுபான்மை என்கிற அடைப்புக்குள் யார் யாரெல்லாம் வருகிறார்களோ, அவர்களெல்லாம் காலங்காலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களை நன்றியோடு நினைத்துக்

2010 மே 14] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

கொண்டிருப்பார்கள் என்கிற அந்த நன்றியறிதலை நான் இங்கே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *1-10*

பேரவைத் தலைவர் அவர்களே, வாக்கு வங்கிகளை உருவாக்க நினைக்கின்றவர்கள் யார் பெரும்பான்மை என்று பார்க்கிறார்கள்; சமூக நீதிக்குச் சான்றுபகர நினைக்கின்றவர்கள் சிறுபான்மையினரை அரவணைத்துக்கொள்ள நினைக்கிறார்கள். அங்குதான் ஒரு அரசியல் தலைவர், எதிர்காலத் தொலைநோக்குப் பார்வையோடு, ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்த வேண்டும் என்கிற ஆத்மார்த்தமான உணர்வோடு செயல்படுகின்ற ஒரு மகத்தான தலைவருடைய உணர்வுகளை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. சிறுபான்மைக்கு உதவுவது என்பது பெரும்பான்மையை சில நேரத்திலே உசுப்பிவிடக்கூடிய செயலாகக்கூட அரசியலில் அமையலாம். அதற்குக்கூட சிலர் பயப்படுவார்கள். நாம், அவர்கள் என்று வகை பிரித்து, நாம் என்கிற தத்துவத்தைப் பெரும்பான்மையாக்குவதற்காக சில அரசியல்வாதிகள் முயற்சிகள் எடுக்கிறார்கள். அதற்காக வெறுப்பு விதைகளை விதைக்கிறார்கள். தேவையில்லாமல் ஒரு சமூகத்தின் மேலே வெறுப்பை உருவாக்கி, அந்த வெறுப்பைத் தங்களுடைய அரசியலுக்கு முதலீடாகக் கொள்ளுகின்ற அந்த மலிவான அரசியல் மலிந்துவிட்ட இந்த நாட்களில், வாக்கு வங்கிகளைப் பற்றிக் கவலைப்படாமல், எண்ணிக்கைகளைப் பற்றிக் கவலைப்படாமல், இந்த நாட்டில் ஜனநாயகத்தின் விளிம்பில் இருக்கின்ற சிறுபான்மை மக்களுக்காகத் தொடர்ந்து நேற்றல்ல, இன்றல்ல, கடந்த, அவர்கள் அரசியலில் அடியெடுத்து வைத்த நாட்களிலிருந்து அந்தச் சரித்திரத்தையெல்லாம் இந்த அவையிலே பதிவு செய்வதற்கு நேரம் போதாது.

இந்த நான்கு ஆண்டுகளுக்குள் நடந்த அந்த நிகழ்ச்சிகளை நாங்கள் தொகுத்தளித்தால்கூட இன்னும் இரண்டு தலைமுறை நன்றியோடு நினைவில் நிற்கக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்புகளைத் தந்திருக்கிறார்கள். இட ஒதுக்கீட்டைத் தந்திருக்கிறார்கள். அதிலும், இன்னும் குறிப்பாக, ஆதி திராவிட கிறிஸ்தவர்களுக்காக அவர்கள் சட்ட ரீதியான, அந்த முழுமையான அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதற்கான அதிகார வரம்பு இங்கே இல்லாத காரணத்தினால், தன்னுடைய

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2010 மே 14

எல்லைக்குள் எதையெல்லாம் நிறைவேற்ற முடியுமோ, சரிசெய்ய முடியுமோ, அதையெல்லாம் கடந்த ஆண்டுகளிலே செய்திருக்கிறார்கள்.

சிறுபான்மைப் பள்ளிகளுக்காக நிரப்பப்படாமல் இருந்த இடங்களையெல்லாம் 400, 500 என்று, 1,000, 2,000 என்று பல்வேறு இடங்களை இந்தச் சிறுபான்மைப் பள்ளிகளுக்கு நிரப்பிக் கொடுத்து, இந்தச் சிறுபான்மைப் பள்ளிகள் ஒழுங்காகக் கல்விச் சேவை செய்வதற்கான வழிவகைகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு பார்வையிலே, கோணங்களிலே, இந்தச் சிறுபான்மை நிறுவனங்களை, சிறுபான்மை மக்களைப் பாதுகாத்து வருகிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

இப்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவிலே ஒரு சிறிய கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இப்போது சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் என்று அவர்கள் தங்களுக்குச் சில உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். அந்தச் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் யார் என்று முடிவு செய்கின்ற அல்லது சான்று அளிக்கின்ற அந்த அதிகாரத்தை இந்தச் சிறுபான்மை ஆணையத்திற்கு வழங்கலாம். ஏனென்று சொன்னால், இன்று நாட்டிலே பல பேர் சிறுபான்மையினர் என்ற போர்வையை வைத்துக்கொண்டு சமூக விரோதச் செயல்களிலே ஈடுபடுகிறார்கள். ஒருவர் கிறிஸ்தவப் பெயர் வைத்திருப்பதால் மட்டுமே கிறிஸ்தவராக மாறிவிடுவது இல்லை. ஆனால், அந்தக் கிறிஸ்தவப் பெயர்களைப் பயன்படுத்திக் கொண்டு சமூக சேவை நிறுவனங்கள், அனாதை விடுதிகள், சிறுவர் காப்பகங்கள் என்று பெயர்களை வைத்துக்கொண்டு, பல சமூக விரோதக் கும்பல்களிலே இந்த நாட்டை ஈடுபடுத்தி, இந்த மத நிறுவனங்களுக்கே மிகப் பெரிய கெட்டப் பெயரை உண்டாக்குகின்ற சூழ்நிலை இன்று இருக்கிறது.

சமீப காலமாக சிறுவர்களை வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வந்து வைத்துக்கொண்டு, அந்தச் சிறுவர்களைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குகின்ற நிகழ்ச்சிகளில்கூட, அந்தப் பெயர்களைப் பார்க்கின்றபொழுது உண்மையிலேயே கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் பதறிப் போகிறார்கள். உண்மையிலேயே கிறிஸ்தவ நிறுவனங்களுக்கும், அந்தப் பெயர்களுக்கும், அந்த நிறுவனத்தை நடத்துகிறவர்களுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடையாது. ஆனால், பெயர்களை,

2010 மே 14] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் நல்ல பெயர்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, சமூக விரோதச் செயலுக்குப் பயன்படுத்துகிற இந்தக் கும்பலை அடையாளம் கண்டுகொள்ளவேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, சிறுபான்மை நிறுவனங்கள் என்று அந்தச் சான்றிதழ் அளிக்கின்ற அதிகாரத்தை அந்த ஆணையத்திற்கு வழங்கலாம் என்றும், அப்படிப்பட்ட உரிமையை அந்த ஆணையத்திற்கு வழங்குகின்றபொழுது, அந்த ஆணையத்திலே இருக்கின்றவர்கள் யார் உண்மையான சிறுபான்மையினர்-இதுபோன்ற அதிகாரங்கள் மற்ற மாநிலங்களில் அந்த ஆணையத்திற்கு வழங்கப் பட்டிருக்கின்றன. எனவே, அந்த அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே அரசு நினைத்தால், அவர்களை உடனே பதவி விலகச் செய்யலாம் என்ற ஒரு ஷரத்து இருக்கிறது. இந்த அதிகாரம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரைப் போன்ற மதச் சார்பற்ற அரசியல் தலைவரிடம் இருக்கின்ற வரை எந்தவிதமான ஆபத்தும் வரப் போவதில்லை. ஆனால், ஒரு காலக்கட்டத்திலே சிறுபான்மை இனத்தவரை நசுக்க வேண்டும் என்கிற உணர்வோடு யாராவது இங்கே வந்து அமர்வார்கள் என்று சொன்னால், அந்த ஷரத்துகள் அவர்களுக்கு மிகவும் ஆதரவாக இருக்கும். ஆகவே, சிறுபான்மையினர் ஆணையத்தினுடைய தலைவரைப் பதவி நீக்கம் செய்வதாக இருந்தால், எப்படி உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளை அல்லது உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்வதற்கு பாராளுமன்றத்தினுடைய அனுமதி வேண்டுமோ, அதைப்போல சிறுபான்மையினர் ஆணையத்தினுடைய தலைவரைப் பதவி நீக்கம் செய்வதற்கும் சட்டமன்றத்தினுடைய அனுமதி வேண்டும் என்று அந்த சட்டத் திருத்தத்தைத் தாங்கள் நிறைவேற்றிக் கொடுத்தீர்கள் என்று சொன்னால், சிறுபான்மைச் சமூகம் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று சொல்லி, இந்த அற்புதமான சட்டமுன்வடிவைத் தமிழகத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த சிறுபான்மை மக்கள் சார்பாக வரவேற்று அமர்கிறேன், நன்றி.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் சிறுபான்மையினர் ஆணைய அமைப்பு உருவாக்கப்பட்டு, அதற்கு முழு அளவிலான அங்கீகாரம் வழங்க சட்டமுன்வடிவை வழங்கியிருக்கிற, நிறைவேற்றவிருக்கிற இந்தச் சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை மனதார வரவேற்கிறேன். காரணம், இந்த நாட்டில் பெரும்பான்மை ஆள வேண்டும், சிறுபான்மை பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொல்கிற சூழ்நிலையில், சிறுபான்மையினர் வேறு எங்கிருந்தோ வந்தவர்கள் அல்ல, சிறுபான்மை என்று சொல்லக்கூடிய இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் தொன்றுதொட்டு சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள்; இன்னும் மொழிப் பற்றாளர்கள் என்பதையெல்லாம் உணர்ந்திருக்கிற இந்த வேளையில், இதுவரையிலே புறக்கணிக்கப்பட்ட காலமெல்லாம் மாறி, சிறுபான்மையினருக்கு முழு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. குறிப்பாக, ஜனநாயகத்தில் எல்லோரும் சமம், எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் வழங்கப்படுகின்றன என்ற அடிப்படையிலேதான் இந்த ஆணையம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் உணர்கிறோம். அந்த அடிப்படையில் பார்ப்போம் என்று சொன்னால், இப்பொழுதுகூட நடுவண் அரசாங்கத்தினாலே, ராஜேந்திர சச்சார் குழு, ரங்கநாத் மிஸ்ரா குழு எல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இப்படி தமிழ்நாட்டில் இந்த ஆணையம் உருவாக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டிருக்கிற இந்த வேளையில், ராஜேந்திர சச்சார் குழு, ரங்கநாத் மிஸ்ரா குழுவினுடைய பரிந்துரைகளை நடுவண் அரசும் நிறைவேற்ற வேண்டுமென்கிற கோரிக்கையைத் தமிழக அரசு முன்வைக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, கிறிஸ்தவப் பெருமக்கள், இஸ்லாமியப் பெருமக்கள் எல்லாம், இந்த ஆணையத்தை உருவாக்கியிருக்கிற வேளையில், அவர்கள் எதிர்பார்த்திருப்பது, இன்று கிறிஸ்தவப் பெருமக்கள் கல்லறைத் தோட்டங்களை ஊரெங்கும் அமைத்திருக்கிறார்கள். புதிதாகக் கல்லறைத் தோட்டங்கள் அமைப்பதற்கு இடமில்லை, அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, கல்லறைத் தோட்டங்கள் இருக்கிற இடத்திற்கு

2010 மே 14] [திரு. ஜி.கே. மணி]

உடனடியாகப் பட்டா வழங்க வேண்டும். திருச்சியில் எடுத்துக்கொள்கிறோம், பல்வேறு மாவட்டங்களில் எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னால், அங்கே கல்லறைத் தோட்டங்களுக்கு அங்கீகாரம் இல்லாமல், பட்டா இல்லாமல் இருக்கிற சூழ்நிலை மாற வேண்டும்; பட்டா வழங்க வேண்டும்.

அதே நேரத்திலே, இஸ்லாமியப் பெருமக்களுக்கான மசூதி கட்டுவதற்குப் பட்டா வழங்கக்கூடிய சூழ்நிலையை எல்லாம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், தலித் கிறிஸ்தவர்களையும் ஆதி திராவிடர் பட்டியலிலே, S.C. பட்டியலிலே கொண்டு வருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆன காரணத்தினாலே, இந்தச் சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டிருப்பதை, அங்கீகாரம் உருவாக்கப்பட்டிருப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆதரித்து, இதை முழு அளவிலான அங்கீகாரத்தோடு நிறைவேற்றுவதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. பிரிவுகள் 2 முதல் 16 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 16 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2010), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,